ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : ஊதியக் குழுவின் பரிந்துரை வர காலதாமதம் ஆகிற காரணத்தால், விலைவாசி ஏற்றம் காரணமாக அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இடைக்கால ஏற்பாடு எதையாவது அரசு செய்யுமா? இடைக்கால நிவாரணமாக அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை அரசாங்கம் பாராட்டுகிறது. இடைக்கால நிவாரணம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பளக் கமிஷன் ஒரு பக்கம் நியமிக்கப்பட்டிருந்தாலும், இடையிலே மலைப் பகுதியில் வேலை பார்க்கின்றவர்களுக்கான அலவன்ஸைக் கூட்டிக் கொடுத்திருக்கிறோம். நான்கு கோடி ரூபாய் அளவுக்கு மின்சார வாரிய ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கும் வகையில் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சம்பளக் கமிஷன் வேலை சிக்கலான, பொறுப்பான வேலை எவ்வளவு விரைவாக அவர்களுடைய பரிந்துரைகளை அளிக்க வேண்டுமோ, அவ்வாறு அளிப்பார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது.

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister **has stated** that the Commission would submit the report as expeditiously as possible. May I request him to give an assurance **that at least** the report of the Pay Commission will come before **1972** elections?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பளக் கமிஷன் அறிக்கை வரக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு இந்தச் சர்க்கார் ஊழியர்களிடத்தில் அக்கறை இருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்களுடைய ஆசையை நிராசையாகக் கண்டிப்பாக இந்த அரசாங்கம் செய்யும்.

Cash awards for Government Servants.

*1 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the **Tamil Nadu** Government has instituted a scheme of giving cash **awards for** suggestions emanating from Government Servants for improve**ments in office and administrative procedure?**

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். அலுவலக நடைமுறையையும், நிர்வாக நடைமுறையையும் சீரமைப்பது குறித்து அரசுப் பணியாளர்கள் அளிக்கும் ஆலோசனைகளுக்கு ரொக்கப் பரிசுகள் அளிப்பதற்கு வகை செய்யும் திட்டம் ஒன்றைத் தொடங்குவது குறித்து பொதுத் (பணிகள்- **A**) துறையின் *11–11–1968* நாளிட்ட 2773-ம் எண் அரசு ஆணையில் தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டம் இந்த ஆணையின் நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு செயலில் இருக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1970 ஆகஸ்ட் 25]

திரு. கே. விநாயகம் : இந்த அரசு ஆணையை ஒட்டி என்னென்ன விதமான யோசனைகளை எந்தெந்த அதிகாரிகள் இதுவரையில நமமுடைய நிர்வாகத்தைல் இருக்கிற குறைபாட்டை நீக்க, சொல்லி யிருக்கிறார்கள்? அப்படிச் சொல்லியிருக்கிற எந்தெந்த உத்தி யோகஸ்தர்களுக்கு இந்த ரொக்கப் பணம் வழங்கப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுவரையில் இரண்டு அதி காரிகள் அப்படிப்பட்ட யோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக சீஃப் செகரட்டரி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டி ருக்கிறது. அந்தக் குழுவின் பரிசீலனைக்காக அந்த யோசனை அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு வெளியிடும் கெஜட் பற்றிய யோசனை ஒன்று; தலைமைச் செயலக அலுவலகத்தில் சிக்கன முறையைக் கொண்டுவரும் யோசனை மற்றொன்று.

Thiru T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Chief Minister to state whether recently the Secretariat Servants' Association has made any representation to the Hon. Chief Minister for changing the office hours and if so, the action taken thereon by the Governmen ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நேற்றைய தினம் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை என்னிடத்தில் கொடுத்திருக்கி றார்கள். அதைப்பற்றி ஆராய்ந்து தகுந்த கருத்தை அளிக்க வேண்டுமென்று தலைமைச் செயலாளரிடம் அறிவிக்கப்பட்டிருக் கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த ஆலோசனைகளைச் சொல்லு வதற்கு ரொக்கப் பரிசு கொடுப்பது என்பது பொதுவாக தமிழர் களுடைய பண்பாட்டுக்கு இணக்கமாக இல்லை. ரொக்கப் பரிசு கொடுப்பது என்று இல்லாமல் சிறந்த ஆலோசனைகளைக் கூறியவர் களுக்கு நன்றி தெரிவிப்பது என்ற அளவில் அரசு முடிவு செய் யுமா ?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது பரிசைப் பெறுகிற நோக்கில் வாங்குபவர்கள் கைக்கொள்ளும் முறையாக இருந்தால் அரசு வரவேற்கும்.

திரு. எம். சுரேந்திரன் : சிரமைப்பு குறித்து அரசுப் பணியாளர் களின் ஆலோசனைகள் என்று குறிப்பிடுவது சிரமைப்பு என்பது மிகத் தேவையான ஒன்று என்று இருந்தாலும் கூட அதற்காகப் பரிசுகள் அளிக்கவேண்டுமா? சிரமைப்புச் செய்யும்போது எல்லாம் பரிசு அளிப்பது என்ற முறை எல்லா இலாகாக்களுக்கும் பரப்பப்படுமா? அப்படிப் பரிசு அளிப்பது என்பதில் எந்தெந்த அளவிற்கு என்னென்ன தொகைகள் என்பது நிர்ணயிக்கப்பட்டி ருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப் பரிசு அளிப்பதில் அதன் தொகை ஆயிரம் ரூபாய்க்கு மேற்படக்கூடாது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சீரமைக்கவேண்டும் என்பதற்காக ஒரு குழு இருந்தாலும், அப்படி நியமிக்கப்பட்டாலும் அந்தக் குழுவிற்கு யோசனைகள் பலவற்றைப் பலரும் தரலாம். அது எந்தத் தரப்பு அலுவலர்களாக இருந்தாலும் அவர்கள் யோசனைகள் தரலாம். அந்த யோசனைகள் அந்தக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு இறுதியாக முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. விநயகம் : அரசு அலுவலகச் சீரமைப்பு பற்றி யோசிக்கும்போது எங்களைப் போல் உள்ளவர்கள் மனுக்கள் கொடுத்தால் இங்கிருந்து போய்விடுகிறது, அதில் சந்தேகமில்லை. சீஃப் செகரட்டேரியேட்டிலிருந்து போய் விடுகிறது. ஆனால் அங்கிருந்து கேட்கப்படுகிற ரிப்போர்ட்டுகள் ஆறு மாதங்கள், ஒரு ஆண்டு ஆனாலும்கூட மாவட்ட அளவிலிருந்து சிபார்சுகள், பரிந்துரைகள், அல்லது விரோதமான குறிப்புகள் எதுவும் சீப் செகரட்டேரியேட்டுக்கு வருவதே இல்லை. இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் என்ன யோசித்தார்கள்? இந்தக் காலதாமதத்தைப் போக்குவதற்கு யாராவது யோசனைகள் சொன்னால் அவருக்கு என்ன பரிசு தருவார்கள் அமைச்சர் அவர்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விநயகம் அவர்களே சொன்னால் ஸ்பெஷல் பரிசு எதாவது அளிக்கப்படும்.

Scheme for supply of drinking water to village.

* Q. 2—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Government has any scheme for supply of drinking water to all the villages in the State;

(b) if so, the details thereof; and

(c) the total amount allotted for this scheme so far?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்,

(இ) கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ், ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் கிராமங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. குடிநீருக்கு அல்லற்படுகிற, பற்றாக்குறையான பகுதிகளில் கிராமக் குடிநீர் சிறப்புப் பணித் திட்டங்களை நிறைவேற்ற சிறப்புத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. வறட்சித் தணிப்புத் திட்டத்தின் கீழும், பஞ்சத்துயர் தணிப்புத் திட்டத்தின் கீழும் குடிநீர் வழங்கு பணித்திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்றும் குடிநீர் வழங்குத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.